**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 66/2026** Date: 02.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | கபில்தேவ், தலைமை காவலர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 02.07.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவில் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 21.02.2025 –ம் தேதி 12.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.s.கோபி அவர்களின் உத்தரவின்பேரில் நானும், பெண் தலைமை காவலர் 220, திருமதி. லட்சுமி என்பவரும் மதுவிலக்கு குற்றம் சம்பந்தமாக மதிகொண்பாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சோளக்கொட்டாய் அருகே கண்காணித்து வந்தபோது சோளக்கொட்டாயை சேர்ந்த முனுசாமி என்பவரின் மகன் முனியப்பன் என்பவர் எங்களை பார்த்து ஓட எத்தனித்தவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது தலா 180 ML அளவுகொண்ட 26 Black Pearl Brandy பாட்டில்களை வைத்திருந்தார். எதிரியை விசாரித்தபோது மதுபாட்டில்களை விற்பனை செய்வதற்காக வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார். சம்பவ இடத்தில் வைத்து மேற்படி எதிரியிடமிருந்து மேற்படி தலா 180 ML அளவுகொண்ட 26 Black Pearl Brandy பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதில் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் நானும், பெண் தலைமை காவலர் திருமதி.லட்சுமி என்பவரும் கையொப்பம் செய்தோம். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகும்.** பின்னர் எதிரியை கைதுசெய்து நிலையம் அழைத்துவந்து வழக்கு பதிவுசெய்தார். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய வீடுகள் இருந்தது என்றால் சரிதான். அவர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பாட்டில்கள் எவ்வாறு இருந்தது என்றால் சுமார் 3 பாட்டில்கள் மூடி திறந்த

நிலையில் இருந்தது. கைப்பற்றுதல் மகஜரில் அனைத்து பாட்டில்களும் மூடி லேசாக திறந்த நிலையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாட்டில்கள் எவ்வாறு அழிக்கப்பட்டது என்றால் மதுபானங்களை கீழே கொட்டப்பட்டு, பாட்டில்கள் பாதுகாப்பான இடத்தில் அழிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. திறந்திருந்ததாக சொல்லப்படும் பாட்டில்களில் இருந்து ரசாயன பகுப்பாய்விற்காக மாதிரி சேகரிக்கப்பட்டதா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் மூடி திறந்த நிலையில் எதிரியிடமிருந்து எந்த மதுபாட்டிலும் கைப்பற்றப்படவில்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் ரசயான பகுப்பாய்விற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு புள்ளிவிபர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.02 17:26:26 +0530